04632

AL/2017/25-B/T-II

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2017 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2017 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2017

ඉතිහාසය II (I කොටස)
வரலாறு II (பகுதி I)
History II (Part I)

**25-B T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

ஐரோப்பிய வரலாறு - ஆதி காலம் முதல் கி.பி. 1989 வரை

சுட்டெண்: ......................................

**அறிவுறுத்தல்கள்:**
- ※ இப்பகுதியில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாப்பத்திரத்திலேயே** விடை எழுதுக.
- ※ ஒவ்வொரு வினா தொடர்பாகவும் **ஐவைந்து** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** சரியானது. ஒரு வினாவுக்கு உரிய சரியான விடையைத் தெரிவுசெய்து, பின் அதனை இப்பத்திரத்திலேயே **அறிவுறுத்தல்களுக்கமையக் குறிப்பிடுக.**
- ※ இப்பகுதிக்கு **40** புள்ளிகள் வழங்கப்படும்.
- ※ **இரண்டு** பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் **மூன்று மணித்தியாலங்களாகும்.** விடைகளை எழுதிய பின்னர், உமது விடைத்தாள்களை ஒப்படைக்கும் பொழுது **பகுதி I** இற்கான விடைத்தாளை **பகுதி II** இற்கான விடைத்தாளுடன் **இணைத்து ஒப்படைக்க வேண்டும்.**

## பகுதி I

- **1 - 10** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவ் ஐந்தினுள் **ஒன்று** மற்றவையோடு **பொருந்தாது. பொருந்தாததைத்** தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**1.** (1) மர்மாரா (2) அஸோவ் (3) ஏஜியன்
(4) கஸ்பியன் (5) பசுபிக் (.........)

**2.** (1) ஜிப்ரோல்டா நீரிணை (2) பொஸ்பரஸ் நீரிணை (3) மகலன் நீரிணை
(4) டார்டனேல்ஸ் நீரிணை (5) டோவர் நீரிணை (.........)

**3.** (1) ஒலிம்பஸ் (2) சமோஸ் (3) லெஸ்போஸ்
(4) கோஸ் (5) டெலோஸ் (.........)

**4.** (1) முடியாட்சி (2) குழு ஆட்சி (3) கொடிய ஆட்சி
(4) பேரரசு (5) ஜனநாயகம் (.........)

**5.** (1) தேமோபிலிப் போர் (2) மரதன் போர் (3) சலாமிஸ் போர்
(4) பிளற்றியா போர் (5) மஜென்ரா போர் (.........)

**6.** (1) ஒகஸ்ரஸ் (2) ஹோரேஸ் (3) குளோடியஸ்
(4) கலிகுலா (5) நீரோ (.........)

**7.** (1) அக்கடெமி (2) பலேர்மோ (3) சலேர்னோ
(4) பவியா (5) பதுவா (.........)

**8.** (1) ஜோன் வைக்கிளிஃப் (2) ஜோன் ஹஸ் (3) மார்ட்டின் லூதர்
(4) இக்னேசியஸ் லொயலா (5) ஜோன் கல்வின் (.........)

**9.** (1) சலி (2) ரிச்செலியூ (3) மசரின்
(4) கொல்பெயர் (5) டான்ரன் (.........)

**10.** (1) பிரித்தானிய பொதுநலவாய அமைப்பு
(2) ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான, பண்பாட்டு நிறுவனம் (UNESCO)
(3) வட அத்திலாந்திக் உடன்படிக்கை நிறுவனம் (NATO)
(4) வோர்சோ உடன்படிக்கை
(5) ஐரோப்பிய ஒன்றியம் (EU) (.........)

[பக். 2 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



- **11 - 15** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐவைந்து சோடிப்** பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடனொன்று **பொருந்தவில்லை. பொருந்தாத** அச்சோடியைத் தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**11.** (1) செயஸ் - யூப்பிற்றர்
(2) அதீனா - மினெர்வா
(3) அப்போலோ - ஆர்டிமீஸ்
(4) அ∴ப்ரொடயிற் - வீனஸ்
(5) பொசைடோன் - நெப்தியூன் (.........)

**12.** (1) ஹெரடோற்றஸ் - பெலப்பொனீசியப் போர் வரலாறு
(2) இபுன் கல்டூன் - கிதாப் - அல் - இபார் (Universal History)
(3) பிரான்சிஸ்கோ குயிசியாடினி - இத்தாலிய வரலாறு
(4) ஆர்னோல்ட் டொயின்பீ - வரலாற்றைப் படித்தல் (A Study of History)
(5) E. H. கார் - வரலாறு என்றால் என்ன? (What is History?) (.........)

**13.** (1) உரோமாபுரி - டயிபர் நதி
(2) லிஸ்பன் - ராகுஸ் நதி
(3) ஜெனீவா - ரோன் நதி
(4) வோர்சோ - விஸ்ரியூலா நதி
(5) பேர்லின் - எல்ப் நதி (.........)

**14.** (1) வலோய் - பிரான்ஸ்
(2) ரியூடர் - இங்கிலாந்து
(3) ஹொஹெஹென்சொலேர்ண் - ஸ்பானியா
(4) பிரகன்ஸா - போர்த்துக்கல்
(5) சவோய் - இத்தாலி (.........)

**15.** (1) V. I. லெனின் - தொழிலாளர் சர்வாதிகாரம்
(2) அலெக்ஸாந்தர் கெரென்ஸ்கி - புதிய பொருளாதாரக் கொள்கை
(3) ஜோசப் ஸ்டாலின் - ஒரு தேசத்தில் சமவுடமை (Socialism in one country)
(4) நிகிதா குருஷேவ் - சமாதான சகவாழ்வு
(5) மிகையில் கொர்ப்பச்சேவ் - கிளாஸ்னோஸ்ட் (வெளிப்படைத்தன்மை) மற்றும் பெரெஸ்ரொய்கா (பொருளாதார மறுசீரமைப்பு) (.........)

- **16 - 25** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் என்பவற்றின் தொகுதிகள் **X, Y** என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையிலே தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடர் ஒழுங்கிலே **தரப்படவில்லை. Y** நிரலில் உள்ளவற்றை **X** நிரலிற்கேற்பச் சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் **ஒன்று** சரியானதாகும். சரியான சேர்மானத்தைத் தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**16.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | ப்ரொட்டகோரஸ் | A | 'நானே அரசு' |
| (ii) | ஹிப்போகிரடீஸ் | B | 'நானே புரட்சி' |
| (iii) | யூலிய சீஸர் | C | 'ஒவ்வொரு நோய்க்கும் இயற்கையான காரணமுண்டு.' |
| (iv) | பதினான்காம் ஆம் லூயி | D | 'மனிதனே எல்லாவற்றினதும் அளவுகோல்.' |
| (v) | நெப்போலியன் போனபாட் | E | 'நான் வந்தேன்; கண்டேன்; கைப்பற்றினேன்.' |

(1) DCEAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (.........)

**17.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | பிளேட்டோ | A | ரெமூஸ் |
| (ii) | சாவோ | B | அரிஸ்டோட்டில் |
| (iii) | ரொமியூலஸ் | C | ரெசிற்றஸ் |
| (iv) | லிவி | D | அக்குனாஸ் |
| (v) | ஒகஸ்ரின் | E | பிண்டார் |

(1) DCEAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (.........)

[பக். 3 ஐப் பார்க்க

agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk



**18.**

| X | | Y | |
|---|---|---|---|
| (i) | நூற்றாண்டுப் போர் | A | பிரான்சும் பிரஷ்யாவும் |
| (ii) | ஒஸ்ரர்லிற்ஸ் போர் | B | ஒஸ்திரியாவும் பிரஷ்யாவும் |
| (iii) | ஜேனா போர் | C | ரஷ்யாவும் துருக்கியும் |
| (iv) | கிரிமியப் போர் | D | இங்கிலாந்தும் பிரான்சும் |
| (v) | சடோவா போர் | E | பிரான்சும் ஒஸ்திரியாவும் |

(1) DCEAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (.........)

**19.**

| X | | Y | |
|---|---|---|---|
| (i) | புதிய உலகம் | A | இத்தாலி |
| (ii) | கடைக்காரர்களின் தேசம் | B | அமெரிக்காக் கண்டம் |
| (iii) | புவியியல் வர்ணனை மட்டுமானது | C | துருக்கி |
| (iv) | ஐரோப்பாவின் நோயாளி | D | ஆபிரிக்காக் கண்டம் |
| (v) | இருண்ட கண்டம் | E | பிரித்தானியா |

(1) DCEAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (.........)

**20.**

| X | | Y | |
|---|---|---|---|
| (i) | நிக்கொலஸ் கொர்ப்பணிக்கஸ் | A | பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு |
| (ii) | ஐசக் நியூட்டன் | B | ரேடியம் கண்டுபிடித்தமை |
| (iii) | சார்ள்ஸ் டார்வின் | C | சூரிய மையக் கோட்பாடு |
| (iv) | மேரி கியூரி | D | சார்பியல் கோட்பாடு |
| (v) | அல்பேர்ட் ஐன்ஸ்டீன் | E | பிரபஞ்ச ஈர்ப்புக் கோட்பாடு |

(1) DCEAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (.........)

**21.**

| X | | Y | |
|---|---|---|---|
| (i) | முப்பதாண்டுப் போர் | A | குச்சுக் கைனார்ஜி உடன்படிக்கை |
| (ii) | ஏழாண்டுப் போர் | B | ப்ரெஸ்ட் - லிடோவ்ஸ் உடன்படிக்கை |
| (iii) | ரஷ்ய - துருக்கியப் போர் (1768 - 1774) | C | போட்ஸ்மத் உடன்படிக்கை |
| (iv) | ரஷ்ய - ஜப்பானியப் போர் | D | பாரிஸ் உடன்படிக்கை |
| (v) | ரஷ்ய - ஜேர்மனியப் போர் (1914 - 1918) | E | வெஸ்ற்பேலியா உடன்படிக்கை |

(1) DCEAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (.........)

**22.**

| X | | Y | |
|---|---|---|---|
| (i) | ஜோன் லொக் | A | பொதுமைத் தீர்மானக் கோட்பாடு |
| (ii) | மொன்ரெஸ்கியூ | B | பயனுடைவாதம் |
| (iii) | ரூசோ | C | தலையிடாக் கோட்பாடு |
| (iv) | அடம் ஸ்மித் | D | மக்கள் உடன்பாட்டில் அமைந்த அரசாங்கம் |
| (v) | ஜெரமி பெந்தம் | E | அதிகாரப் பகிர்வுக் கோட்பாடு |

(1) DCEAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (.........)

**23.**

| X | | Y | |
|---|---|---|---|
| (i) | மகா பிறெடறிக் | A | ஸ்பானியா |
| (ii) | மகா கதரீன் | B | பிரான்ஸ் |
| (iii) | மரியா தெரேசா | C | ரஷ்யா |
| (iv) | மூன்றாம் சார்ள்ஸ் | D | பிரஷ்யா |
| (v) | பதினைந்தாம் லூயி | E | ஒஸ்திரியா |

(1) DCEAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (.........)

**24.**

| X | | Y | |
|---|---|---|---|
| (i) | சிவப்புச்சட்டையினர் | A | ட்ரொட்ஸ்கி |
| (ii) | கருங்கை (Black hand) | B | கரிபோல்டி |
| (iii) | செம்படை | C | முசோலினி |
| (iv) | கறுப்புச் சட்டையினர் | D | ஹிட்லர் |
| (v) | பழுப்புநிறச் சட்டையினர் | E | சேர்பியாவின் இரகசிய பயங்கரவாதக் குழுவினர் |

(1) DCEAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (.........)

[பக். 4 ஐப் பார்க்க

agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk



4630

**25.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | சர்வதேச தொழிலாளர் நிறுவனம் (ILO) | A | ஹேக் |
| (ii) | ஐக்கிய நாடுகள் சபை (UNO) | B | உரோமாபுரி |
| (iii) | சர்வதேச நீதிமன்றம் (ICJ) | C | ஜெனீவா |
| (iv) | உலக உணவுத்திட்டம் (WFP) | D | வோஷிங்டன் |
| (v) | சர்வதேச நாணய நிதியம் (IMF) | E | நியூயோர்க் |

(1) DCEAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (.........)

- **26 - 30** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** அல்லது **பல** சரியான விடைகளாகும். சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவுசெய்து,
  **(A)** யும் **(B)** யும் மட்டும் சரியாயின் .................. **1** எனவும்
  **(B)** யும் **(C)** யும் மட்டும் சரியாயின் .................. **2** எனவும்
  **(C)** யும் **(D)** யும் மட்டும் சரியாயின் .................. **3** எனவும்
  **(A)** யும் **(C)** யும் மட்டும் சரியாயின் .................. **4** எனவும்

ஒரு விடை மட்டும் அல்லது **இரண்டிற்கு மேற்பட்ட** விடைகள் சரியாயின் ... **5** எனவும் **அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| **(A)** யும் **(B)** யும் மட்டும் சரி | **(B)** யும் **(C)** யும் மட்டும் சரி | **(C)** யும் **(D)** யும் மட்டும் சரி | **(A)** யும் **(C)** யும் மட்டும் சரி | ஒரு விடை மட்டும் அல்லது **இரண்டிற்கு மேற்பட்ட** விடைகள் சரி |

**26. மேல்வருவனவற்றுள் கிரேக்க காவியங்கள் யாவை?**
(A) இலியட் (B) ஒடிஸி (C) அன்ரிகோன் (D) ஈனிட் (.........)

**27. மேல்வருவனவற்றுள் பிரித்தானியா மீது படையெடுத்த மிலேச்ச இனங்கள் யாவை?**
(A) ஒஸ்ரோகொத் (B) பிராங்க் (C) ஆங்கிளர் (D) சக்சோனியர் (.........)

**28. மேல்வருவோருள் பிந்திய மத்திய காலத்தில் வாழ்ந்த இத்தாலிய எழுத்தாளர்கள் யாவர்?**
(A) டான்ரே (B) பெட்ராக்
(C) பொகாஷியோ (D) பொற்றிசெலி (.........)

**29. மேல்வருவனவற்றுள் எந்த நாடுகளில் பதினைந்தாம், பதினாறாம் நூற்றாண்டுகளிலே தேசிய அரசுகள் உருவாகின?**
(A) ஜேர்மனி (B) ஸ்பானியா (C) பிரான்ஸ் (D) இத்தாலி (.........)

**30. மேல்வருவோருள் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சோவியத் ஒன்றியத்தின் தலைவராய் இருந்தோர் யாவர்?**
(A) அலெக்சி கொசிஜின்
(B) அலெக்ஸாந்தர் சோல்ஸ்ஸெனிற்ஸின்
(C) லியோனிட் வ்றெஷ்நேவ்
(D) அன்ரயி சகரோவ் (.........)

- **31 - 35** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் **ஐந்து** விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று உரிய தலைப்புடன் **பொருந்தாது. அதனைத்** தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**31. முப்பதாண்டுப் போரின் பிரதானமான கட்டங்கள்**
(1) பொஹீமியா
(2) ஜேர்மனி
(3) டென்மார்க்
(4) சுவீடன்
(5) பிரான்ஸ் (.........)

**32. அமெரிக்கப் புரட்சியோடு தொடர்புடைய பிரதான நிகழ்ச்சிகள்**
(1) பொஸ்டன் தேநீர் விருந்து
(2) கண்டத்து மாநாடுகள்
(3) பஸ்ரீல் தகர்க்கப்பட்டமை
(4) சுதந்திரப் பிரகடனம்
(5) பாரிஸ் உடன்படிக்கை (.........)

agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

[பக். 5 ஐப் பார்க்க

www.agaram.lk



**33.** **ஐரோப்பியக் கூட்டணி நடத்திய மாநாடுகள்**

(1) ஐ - லா - சப்பேல் (2) ட்ரொபௌ (3) லயிபாக்
(4) வெரோனா (5) பாரிஸ் (.........)

**34.** **முதலாம் உலகப் போருக்கு ஏதுவான காரணங்கள்**

(1) ஐரோப்பிய வல்லரசுகளுக்கிடையிலான காலனித்துவப்போட்டி
(2) இரு வல்லரசு அணிகளாக ஐரோப்பா பிரிந்தமை
(3) அல்சேஸ், லோரெய்ன் பகுதிகளை ஜேர்மனி பெற்றுக் கொண்டதால் பிரான்சில் ஏற்பட்ட பகைமை
(4) பாசிசம், நாட்சிசம் என்பனவற்றின் எழுச்சி
(5) இங்கிலாந்துக்கும் ஜேர்மனிக்கும் இடையிலே கடற்படை வலிமை தொடர்பில் ஏற்பட்ட போட்டி (.........)

**35.** **ஐக்கிய நாடுகள் நிறுவனம் தொடர்புகொண்ட பிரதானமான நெருக்கடிகள்**

(1) மொரோக்கோ நெருக்கடி
(2) கொரியப் போர்
(3) சுவஸ் நெருக்கடி
(4) பெல்ஜியம் கொங்கோவின் உள்நாட்டுப் போர்
(5) காஷ்மீர் நெருக்கடி (.........)

● **36 - 40** வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருந்துவது எதுவென்பதைத் தெரிந்து, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **1** | சரியானது | பிழையானது |
| **2** | சரியானது | சரியானது |
| **3** | பிழையானது | பிழையானது |
| **4** | பிழையானது | சரியானது |
| **5** | சரியானது | சரியானதும், **முதலாம்** கூற்றினை நன்றாக விளக்குவதுமாகும். |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று | |
|---|---|---|---|
| **36.** | பாரசீகருக்கு எதிரான கிரேக்கரின் போர் பெலப்பொனீசியப் போர் எனப்படும். | 'குடியரசு (Republic)', அரசியல் பற்றி அரிஸ்டோட்டில் எழுதிய மிக முக்கியமான நூலாகும். | (.........) |
| **37.** | கி.பி. 313 ஆம் ஆண்டு கொன்ஸ்ற்றன்ரைனின் மிலான் பிரகடனம் மூலம் கிறிஸ்தவர்களுக்கு வழிபாட்டுச் சுதந்திரம் வழங்கினார். | மிலேச்சர்கள் கி.பி. 476 இல் இறுதியான உரோமப் பேரரசரை நீக்கிவிட்டு ஹுனிபலை சிம்மாசனம் ஏற்றினார்கள். | (.........) |
| **38.** | ஐரோப்பிய சமுதாயத்தின் எல்லா அமைப்புகளிலும் பல பாரதூரமான விளைவுகளைப் புரெட்டஸ்தாந்து சீர்திருத்தம் ஏற்படுத்தியது. | புரெட்டஸ்தாந்து சீர்திருத்தம் கிறிஸ்தவ சமய ஒற்றுமையை ஒழித்ததோடு சமய - அரசியல் போர்களுக்கு வழிவகுத்தது. | (.........) |
| **39.** | ஒஸ்திரிய - ஹங்கேரிய ஆட்சிக்கு உரிமையுடைய முடிக்குரிய இளவரசன் பிரான்ஸ் பேர்டினன்ட் பொஸ்னியாவின் தலைநகரான சராஜிவோவிற் கொலையுண்டமை முதலாம் உலகப்போருக்கான காரணமாகும். | வேர்சை சமாதான உடன்படிக்கை மூலம் ஒஸ்திரியா - ஹங்கேரி இராச்சியம் ஒழிக்கப்பட்டது. | (.........) |
| **40.** | 1929 ஆம் ஆண்டு ஹிட்லருக்கும் பாப்பரசருக்குமிடையே ஏற்பட்ட லடரன் உடன்படிக்கை கத்தோலிக்க சமயம் ஜேர்மனியின் உத்தியோகபூர்வமான அரச சமயமாக ஒப்புக் கொள்ளப்பட்டது. | 1961 இல் அமைக்கப்பட்ட பேர்லின் சுவர் 1989 இல் இடிக்கப்பட்டது. | (.........) |

* *

[பக். 6 ஐப் பார்க்க

agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2017 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2017 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2017

| | | |
|---|---|---|
| ඉතිහාසය | II | (II කොටස) |
| வரலாறு | II | (பகுதி II) |
| History | II | (Part II) |

**25-B** **T** **II**

**ஐரோப்பிய வரலாறு - ஆதி காலம் முதல் கி.பி. 1989 வரை**

**அறிவுறுத்தல்கள்:**

✳ **முதலாம்** வினாவுக்கும் வேறு ஏதாவது **மூன்று** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(**முதலாம்** வினாவுக்கு விடையளிப்பதற்கு **ஐரோப்பாவின் புறவுருவப்படம்** வழங்கப்படும்.)

## பகுதி II

**1.** உமக்கு வழங்கப்பட்ட புறவுருவப்படத்திலே மேலே தரப்பட்ட **இடங்கள் எல்லாவற்றையும் குறித்துப் பெயரிட்டு,** அவற்றுள் எவையேனும் **இரண்டிற்குச்** சுருக்கமான வரலாற்றுக் குறிப்புகள் எழுதுக.

(i) சார்டினியா
(ii) ரயிபர் நதி
(iii) ஆத்திரியாத்திக் கடல்
(iv) டார்டநெல்ஸ் நீரிணை
(v) லிஸ்பன்
(vi) போலாந்து
(vii) மன்செஸ்டர்
(viii) கியல் கால்வாய்

*(சரியாகக் குறித்துப் பெயரிட்ட ஒவ்வொன்றுக்கும் **01** புள்ளி; சிறுகுறிப்பு ஒவ்வொன்றுக்கும் **05** புள்ளிகள்)*

**2.** மேல்வரும் துறைகளில் பண்டைய உரோமர் ஈட்டிய சாதனைகளைச் சுருக்கமாகப் பரிசீலனை செய்க.

(i) ஆட்சிமுறை
(ii) சட்டம் *(14 புள்ளிகள்)*

**3.** (i) ஒரு சமூக மற்றும் பொருளாதார முறை என்ற வகையில் ஐரோப்பிய மானியமுறையின் பிரதானமான அம்சங்களைப் பரிசீலனை செய்க. *(08 புள்ளிகள்)*

(ii) மத்திய காலத்தின் இறுதிப்பகுதியில் ஐரோப்பாவிலே மானியமுறை சீர்குலைந்தவாற்றை விளக்குக. *(06 புள்ளிகள்)*

**4.** "நாடுகாண் பயணங்கள் ஐரோப்பாவிலே அரசியல், பொருளாதாரத் துறைகளில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தின."

(i) ஆரம்பகால நாடுகாண் பயணங்களில் ஈடுபட்ட ஓர் ஐபீரிய தேசத்தின் பெயரைக் குறிப்பிடுக. *(01 புள்ளி)*
(ii) நாடுகாண் பயணங்களுக்கு ஆதரவளித்த அரசர்கள் **இருவரின்** பெயர்களைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*
(iii) ஐரோப்பிய நாடொன்றினால் மேற்கொள்ளப்பட்ட நாடுகாண் பயணங்கள் பற்றி ஒரு சுருக்கமான குறிப்பு எழுதுக. *(03 புள்ளிகள்)*
(iv) நாடுகாண் பயணங்களின் விளைவாக ஐரோப்பாவிற் பெருமளவில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார மாற்றங்களை ஆராய்க. *(08 புள்ளிகள்)*

**5.** "பிரெஞ்சுப் புரட்சி மத்தியதர வர்க்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டது."

(i) புரட்சி தொடங்கியபொழுது பிரான்சில் ஆட்சிபுரிந்த அரசரின் பெயரைக் குறிப்பிடுக. *(01 புள்ளி)*
(ii) புரட்சிக்கு முன்பு பிரான்சில் நிலவிய **மூன்று** சமூக வர்க்கங்களினதும் பெயர்களைக் குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*
(iii) புரட்சிக்கு முன் பிரான்சில் வாழ்ந்த தத்துவஞானிகள் **இருவரின்** பெயர்களைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*
(iv) மத்தியதர வர்க்கத்தினரின் குறைபாடுகளிற் கவனம் செலுத்தி பிரெஞ்சுப் புரட்சியை ஏற்படுத்துவதில் அவர்கள் கொண்டிருந்த பங்கின் ஒப்பீட்டு ரீதியான முக்கியத்துவத்தை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க. *(08 புள்ளிகள்)*

**6.** (i) வியன்னா மாநாடு எதிர்கொண்ட முக்கியமான பிரச்சினைகள் யாவை? *(05 புள்ளிகள்)*

(ii) மேலே குறிப்பிட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வியன்னா மாநாடு மேற்கொண்ட நடவடிக்கைகளை விவரிக்குக. *(09 புள்ளிகள்)*

[பக். 7 ஐப் பார்க்க

agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk



**7.** இத்தாலியை ஒன்றாக இணைக்கும் இயக்கத்தில் மசினி, கவூர், கரிபோல்டி ஆகியோர் கொண்டிருந்த பங்கினைப் பரிசீலனை செய்க. *(14 புள்ளிகள்)*

**8.** "சர்வதேச சங்கத்தின் தோல்வியே இரண்டாம் உலகப் போர் ஏற்படுவதற்கு வழிவகுத்தது."

(i) சர்வதேச சங்கத்தை அமைக்க வேண்டுமென்ற பிரேரணையை சிபார்சு செய்த தலைவரின் பெயரைக் குறிப்பிடுக. *(01 புள்ளி)*

(ii) சர்வதேச சங்கத்தின் பிரதானமான குறிக்கோள்கள் யாவை? *(03 புள்ளிகள்)*

(iii) சர்வதேச சங்கம் ஏன் தோல்வியடைந்தது? *(03 புள்ளிகள்)*

(iv) இரண்டாம் உலகப் போர் ஏற்படுவதற்கு சர்வதேச சங்கத்தின் தோல்வி எந்தளவிற்குப் பொறுப்பாக இருந்தது என்பதைப் பரிசீலனை செய்க. *(07 புள்ளிகள்)*

**9.** **(A)** பகுதிக்கு **அல்லது** **(B)** பகுதிக்கு மட்டும் விடை எழுதுக.

**(A)** (i) 'பனிப்போர்' என்பது எதனைக் குறிக்கும்? *(06 புள்ளிகள்)*

(ii) ஐரோப்பிய அரசியலிற் பனிப்போர் எவ்வாறான செல்வாக்கினை ஏற்படுத்தியது? *(08 புள்ளிகள்)*

**(B)** மேல்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறு குறிப்புகள் எழுதுக.

(i) புராதன கால கிரேக்கக் கலையும் இலக்கியமும்

(ii) மறுமலர்ச்சிக் கலை

(iii) மாற்றுச் சீர்திருத்தம் (Counter Reformation)

(iv) அமெரிக்கப் புரட்சியின் பின்னணி

(v) பிஸ்மார்க்கும் ஜேர்மன் தேசியவாதமும்

(vi) பொல்ஷெவிக் புரட்சி

*(ஒவ்வொரு குறிப்புக்கும் 07 புள்ளிகள் வீதம்)*

* * *

Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]


ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2017 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சை, 2017 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2017

| | | | |
|---|---|---|---|
| ඉතිහාසය / வரலாறு / History | II | 25-B | T |

ප්‍රශ්න අංකය / வினா இல. / Question No. **1**

විභාග අංකය / சுட்டெண் / Index No. ..............................




Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

agaram.lk